

பாமாலை 200 கர்த்தாவே , பரஞ்சோதியால்

1 கர்த்தாவே , பரஞ்சோதியால்
ஆன்மாவைப் பிரகாசிப்பிப்பீர் ;
சீர் அருள் என்னும் பணியாள்
உம் அன்பாய்வோரை உய்விப்பீர்.

2 உம் மந்தை சுத்தமாகவும்,
விளக்கெல்லாம் இலங்கவும்,
போதகர் சபையாருக்கும்
வரப்பிரசாதம் அருளும்.

3 விண் ஆள் தாம் முதல் ஆகியே,
மற்றோரை ஆங்குயர்த்தவும்,
விஸ்வாசம் நம்பிக்கை அன்பே
பிரசங்கிப்போர்க்கு ஈந்திடும்.

4 எவ்வேழையான பேர்களும்
மேலான ராஜ்யம் சேரவே,
கேட்போர்க்குக் கற்க விருப்பம்
சற்குணம், சாந்தம், நல்குமே.

5 நிர்பந்த ஆயுள் முழுதும்
ஒன்றாய் விழித்திருக்கவே,
உம் மேய்ப்பர் மந்தை இரண்டையும்
ஆசிர்வதித்துக் காருமே

6 இவ்வாறு அருள் செய்திடில்
உம்மில் பிழைத்தும்மில் சாவோம்;
இம்மையில் நாங்கள் வாழ்க்கையில்
சாவாமையை முன் ருசிப்போம்.